# பத்திரிக்கைச் செய்தி

## சொத்து வரி பெயர் மாற்றம் செய்ய ரூ.10,000/- லஞ்சம் கேட்டு பெற்று வாங்கிய பில்கலெக்டர் கைது

புகார்தாரர் திரு.சுந்தர், ஏனாத்தூர் கிராமம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்கள் தன்னுடைய மகன் பெயரில் சொத்து வரியை மாற்றம் செய்வதற்கு காஞ்சிபுரம் மாநகராட்சி வரி வசூல் மைய பில் கலெக்டர் திருமதி.ரேனுகாவை சந்தித்து விபரம் கேட்க, அவர் அது தொடர்பான விண்ணபத்தினை பூர்த்தி செய்து, ஆவணங்களை இணைத்து தன்னை வந்து சந்திக்குமாறு கூறியுள்ளார். பின் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணபத்தினை புகார்தாரர் பில் கலெக்டர் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளார். சொத்து வரி பெயர் மாற்றம் செய்து கொடுக்க தனக்கு லஞ்சமாக ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என திருமதி.ரேனுகா, பில் கலெக்டர் கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, காஞ்சிபுரம் பிரிவில் புகார் மனு கொடுத்துள்ளார். இப்புகார் சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு இன்று 30.08.2023ம் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின் போது திருமதி.ரேனுகா, பில் கலெக்டர், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணமான ரூ.10,000/ -யை கேட்டு பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் கைது செய்யப்பட்டார்.